**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை** : திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 11ம் நாள்

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் நாள் புதன்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 133/2025**

**CNR.No.TNMY07-000166-2025**

கலியமூர்த்தி ...வாதி

**....எதிர்...**

1. வட்டாச்சியர்,
   சீர்காழி.
2. தமிழ்நாடு அரசு சார்பாக
   அதன் மாவட்ட ஆட்சியர்,
   மயிலாடுதுறை. ....பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 24.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. ஜீவானந்தம் அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

கடந்த 18.03.2022ம் தேதியன்று இறந்துபோன குயிலம்பாளுக்கு வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என்ற விளம்புகை செய்யக்கோரியும், மேற்படி இறந்த குயிலம்பாளுக்கு வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என 1ம் பிரதிவாதி, வாதிக்கு வாரிசு சான்று வழங்கிட ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.25 18:12:26 +0530

1. <u>வாதி வழக்குரையின் சுருக்கம்</u>

**(1.1)** வாதி 1 வயது குழந்தையாக இருந்தபோது, வாதியின் தாயார் இறந்து விட்டதாகவும், வாதியின் தந்தை வாதியை மட்டும் வைத்துக்கொண்டு தனியாக வாழ்ந்தபோது, உறவினர்களின் வற்புறுத்தலினால் வாதியின் தந்தை குயிலம்பாள் என்பவரை மறுமணம் செய்து கொண்டதாகவும், குயிலம்பாளுக்கு குழந்தைகள் ஏதும் இல்லை என்றும், வாதியின் தந்தை வீராசாமி 45 ஆண்டுகளுக்கு முன்பே இறந்து விட்டதாகவும்,

**(1.2)** வாதி திருமணமாகி குழந்தைகளுடன் இருந்தாலும் தனது வளர்ப்பு தாயான குயிலம்பாளுடன் ஒரே வீட்டில் வசித்து வந்ததாகவும், குயிலம்பாள் அவர்கள் கடந்த 18.03.2022ல் இறந்து விட்டதாகவும், வாதியானவர் இறந்த தனது தாயார் குயிலம்பாளின் வாரிசு சான்று கேட்டு 30.01.2023ல் Onlineல் விண்ணப்பித்ததாகவும், கடந்த 13.02.2023 அன்று வாதியின் மனு Based on RI Report found applicant not direct legal heir person so not recommended this application என மனு திருப்பப்பட்டதாகவும்,

**(1.3)** இறந்த குயிலம்பாளுக்கு வாதியை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்றும், வாதி குடியிருந்து வரும் இடம் வாதியின் தாயார் பெயரில் உள்ளதால் அரசின் இலவச வீடு பெற விண்ணப்பிக்க வாரிசு சான்று தேவைப்படுவதாகவும், எனவே, கடந்த 18.03.2022ல் இறந்த குயிலம்பாளுக்கு வாதி மட்டுமே வாரிசு என்று விளம்புகை செய்யக்கோரியும், 1ம் பிரதிவாதியிடமிருந்து வாரிசு சான்று பெற செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>

**(2.1)** இறந்துபோன குயிலம்பாளுக்கு வாதி மட்டுமே சட்டப்படியான



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.25 18:12:33 +0530

நேரடியான வாரிசு என்பதினை வாதி நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளதாகவும், வாதி தனது வழக்குரையில் வீராசாமி இறந்துவிட்டார் என்று கூறியுள்ளதையும் வாதி நிரூபிக்க வேண்டுமென்றும், வாதி நீதிமன்ற உத்தரவின் பேரில் 1ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று பெற்றுக்கொள்ள கடமைப்பட்டுள்ளதாகவும்,

**(2.2)** 1ம் பிரதிவாதிக்கு நேரடியான வாரிசுதாரர்களுக்கு மட்டுமே வாரிசு சான்று வழங்கும் அதிகாரம் உள்ளது என்றும், இறந்துபோன குயிலம்பாளுக்கு வாதி முதல்நிலை வாரிசு இல்லை என்றும், ஆகையால் 1ம் பிரதிவாதி வாதிக்கு வாரிசு சான்று வழங்க இயலவில்லை என்றும்,

**(2.3)** பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய 80CPC–யின் கீழான அறிவிப்பு வாதியால் கொடுக்கப்படாமல் இவ்வழக்கு அவசர நிமிர்த்தம் எதற்காக தாக்கல் செய்யப்படுகிறது என்ற விபரமும் வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எவ்வித அடிப்படை காரணமும் இன்றி கறைபடிந்த கரங்களுடன் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கினை அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>4. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.</u>**

1. வாதி தாவாவில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?
2. வாதி தாவாவில் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?
3. தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்ககூடியது?

**5.** வாதி தரப்பில் வாதியான திரு. கலியமூர்த்தி என்பவர் **வா.சா.1** ஆகவும்,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.25 18:12:41 +0530

திரு. மாரிமுத்து என்பவர் **வா.சா.2** ஆகவும், திரு. தங்கசாமி என்பவர் **வா.சா.3** ஆகவும் சாட்சியம் அளித்துள்ளனர். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியங்கள், சான்றாவணங்கள் இல்லை.

**6.** வாதி தரப்பில் இவ்வழக்கினை அனுசரித்து வாதியான திரு. கலியமூர்த்தி என்பவர் **வா.சா.1** ஆக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அவர் மூலமாக 02.06.2022 தேதியிட்ட குயிலம்பாள் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், குயிலம்பாள் வாரிசு சான்று வேண்டி விண்ணப்பித்த மனுவின் சுய உறுதிமொழி **வா.சா.ஆ2** ஆகவும், 13.02.2023 தேதியிட்ட சீர்காழி வட்டாட்சியரால் திருப்பப்பட்ட மனுவின் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>7. வாதி தரப்பு வாதம்</u>**

**(7.1) வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** இந்த வழக்கின் வாதி ஒரு வயதாக இருந்தபோது, அவரது தாயார் இறந்துவிட்டார் என்றும், அதன்பிறகு வாதியின் தந்தை வீராசாமி குயிலம்பாள் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டு வாழ்ந்து வந்தார் என்றும், வாதியின் தந்தை வீராசாமி சுமார் 45 வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டார் என்றும், அதன்பிறகு வாதி, தனது குடும்பத்தினருடன் வசித்துவந்த போதும், குயிலம்பாள் இறக்கும் வரை வாதியின் வீட்டிலேயே ஒன்றாக வசித்து வந்ததாகவும்,

**(7.2)** கடந்த 18.03.2022ல் மேற்படி குயிலம்பாள் காலமாகிவிட்டார் என்றும், அவருக்கு வாதி நேரடி வாரிசு இல்லை என்ற காரணத்தால் 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் காலமான குயிலம்பாளுக்கு வாரிசு சான்று கேட்டு விண்ணப்பித்ததில் மனுவானது திருப்பப்பட்டதாகவும், அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், வாதி தரப்பில் வாதி மற்றும் வாதியின் ஊரைச் சேர்ந்த மேலும் இருவர் வாதி வழக்கை அனுசரித்து சாட்சியம்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.25 18:12:49 +0530

அளித்துள்ளதாகவும், வாதி தரப்பில் வழக்கை நிரூபித்துள்ளதால், தாவாப்படி தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பு வாதம் –</u>

**(7.3) 1,2 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர்** காலம்சென்ற குயிலம்பாளின் கணவர் வீராசாமி காலமாகிவிட்டார் என்பதை வாதி தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும், வாதி மட்டுமே குயிலம்பாளுக்கு நேரடி வாரிசு என்பதை வாதி நிரூபணம் செய்யவில்லை என்றும், வாதி அவரது வழக்கினை நிரூபணம் செய்யாததால், வழக்கினை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது.**

**8**. இவ்வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வாதுரை, வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை பரிசீலனை செய்து இவ்வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்வு காண்கிறது.

**<u>தீர்வு</u>**

**<u>9. எழுவினா –1</u>**

**வாதி தாவாவில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?**

**(9.1)** கடந்த 18.03.2022ம் தேதியன்று இறந்துபோன குயிலம்பாளிற்கு வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என்ற விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளனர்.

**(9.2)** கடந்த 18.03.2022ல் குயிலம்பாள் காலமாகிவிட்டார் என்பதற்கு ஆதாரமாக அவரின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவரது கணவரும் வாதியின் தந்தையுமான வீராசாமி சுமார்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.25 18:12:57 +0530

45 வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டார் என்ற வாதியின் சாட்சியத்தை அனுசரித்து வாதியின் ஊரைச் சேர்ந்த வா.சா.2 மற்றும் வா.சா.3 சாட்சியமளித்துள்ளனர்.

**(9.3)** இறந்துபோன குயிலம்பாளுக்கு வாரிசு சான்றிதழ் வேண்டி 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாதி மனு தாக்கல் செய்தும், மேற்படி மனுவானது வாதி குயிலம்பாளுக்கு நேரடி வாரிசு இல்லை என்ற காரணத்தால் திருப்பப்பட்டுள்ளது என்ற விபரமானது வா.சா.ஆ.3ன் வழியாக தெரிய வருகிறது.

**(9.4)** மேற்கண்ட சங்கதிகளை அனுசரித்து வாதியானவர் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தை அனுசரித்து வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். மேற்கண்ட சாட்சியங்கள் பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டிருந்தாலும், வழக்கின் போக்கை மாற்றும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எந்த சாட்சியத்தையும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**(9.5)** மேலே கண்ட சாட்சியங்களையும் சான்றாவணங்களையும் பரிசீலனை செய்யும்போது, வாதியின் தந்தையும் குயிலம்பாளின் கணவருமான வீராசாமி என்பவர் சுமார் 45 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்பதும், மேற்படி வீராசாமி, குயிலம்பாள் தம்பதிகளுக்கு வேறு வாரிசுகள் இல்லை என்பதும், குயிலம்பாள் கடந்த 18.03.2022ல் இறந்துவிட்டார் என்பதையும், அவருக்கு வாதி மட்டுமே வாரிசு என்பதையும், வாதி தரப்பில் தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

**(9.6)** எனவே, வாதி தாவாவில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா−1 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**10.எழுவினா−2**

**வாதி தாவாவில் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ?**

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.25 18:13:07 +0530

வாதி தான் இறந்து போன குயிலம்பாள் என்பவரின் வாரிசு என விளம்புகை செய்து எழுவினா-1 ஆனது வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், அவ்விளம்பல் பரிகாரத்தினையொட்டி இறந்து போன குயிலம்பாள் என்பவரின் வாரிசு சான்றை வாதிக்கு, 1ம் பிரதிவாதி வழங்க வேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா-2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

<u>**11. எழுவினா-3**</u>

**தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்ககூடியது ?**

எழுவினா-1 மற்றும் எழுவினா-2 வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லை என எழுவினா-3 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**முடிவில்,** இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு, வாதி தான் கடந்த 18.03.2022ல் இறந்து போன குயிலம்பாள் என்பவரின் வாரிசு என விளம்புகை செய்தும், அவ்விளம்புகை பரிகாரத்தினையொட்டி இறந்து போன குயிலம்பாள் என்பவரின் வாரிசு சான்றை வாதிக்கு, 1ம் பிரதிவாதி இன்றிலிருந்து இரண்டு மாதத்திற்குள் (25.05.2026) வழங்க வேண்டும் என செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கியும், செலவுத்தொகையின்றி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.25 18:13:17 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>பின் இணைப்பு</u>**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 திரு. கலியமூர்த்தி (வாதி)

வா.சா.2 திரு. மாரிமுத்து

வா.சா.3 திரு. தங்கசாமி

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.06.2022 | குயிலம்பாள் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.2 | 30.01.2023 | குயிலம்பாள் வாரிசு சான்று வேண்டி விண்ணப்பித்த மனுவின் சுய உறுதிமொழி |
| வா.சா.ஆ.3 | 13.02.2023 | சீர்காழி வட்டாட்சியரால் திருப்பப்பட்ட மனுவின் கணினி பதிவிறக்க நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** **–இல்லை–**

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** **–இல்லை–**

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.25 18:13:29 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**சீர்காழி**

**<u>நேரிய/வரைவு தீர்ப்புரை</u>**

அசல் வழக்கு எண்.133/2025

நாள்.25.03.2026.